FORM NO. 124
JUDICIAL MAGISTRATE NO:II COURT– SATTUR
JUDGEMENT IN CALENDER CASE NO **196/2023** ON THE FILE OF
JUDICIAL MAGISTRATE NO:II, COURT – SATTUR

| | |
|---|---|
| Complaint | அரசுக்காக:– காவல் உதவி ஆய்வாளர், சாத்தூர் தாலுகா காவல் நிலையம். (குற்ற எண்.69/2023) |
| Accused | 1.திரு.சுந்தர் என்ற சூர்யா, த/பெ.சந்திரகுமார்<br>2.திரு.சந்திரகுமார், த/பெ.சுந்தர்ராஜ்,<br>3.திரு.பார்திபன், த/பெ.சின்னதுரை,<br>4.திரு.பாலமுருகன், த/பெ.சின்னதுரை,<br>5.திரு.தோஸ்குட்டி, த/பெ.ஜான்ராஜ், |
| Offence | குற்றம்சாட்டப்பட்டது :– 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(2) கீழும், 2 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 323, 506(2) கீழும், 5 வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 326, 506(2) கீழும்<br>குற்றச்சாட்டு வனையப்பட்டது:– 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294(b), 323 உ/இ 149, 324, 326 உ/இ 149 மற்றும் 506(2) கீழும், 2, 3 மற்றும் 4 வது எதிரிகள் மீது 147, 148, 294(b) உ/இ 149, 323, 324 உ/இ 149, 326 உ/இ 149 மற்றும் 506(2) கீழும், 5 வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(b) உ/இ 149, 323 உ/இ 149, 324, 326 மற்றும் 506(2) கீழும் |
| Finding | 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294(b), 323 உ/இ 149, 324, 326 உ/இ 149 மற்றும் 506(2) கீழும், 2, 3 மற்றும் 4 வது எதிரிகள் மீது 147, 148, 294(b) உ/இ 149, 323, 324 உ/இ 149, 326 உ/இ 149 மற்றும் 506(2) கீழும், 5 வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(b) உ/இ 149, 323 உ/இ 149, 324, 326 மற்றும் 506(2) கீழும் வனைந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, அவர்கள் கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்கள். |
| Sentence | எதிரிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள். |

| Description of the Accused | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Sl. No. (1) | Name (2) | Father's Name/ Husband's Name (3) | Caste or race | Occupation (4) | Residence (5) | age (6) |
| 1. | சுந்தர் என்ற சூர்யா | சந்திரகுமார் | இந்து | கூலி | நடுசூராங்குடி, சாத்தூர் | 27 |
| 2. | சந்திரகுமார் | சுந்தர்ராஜ் | இந்து | கூலி | நடுசூராங்குடி, சாத்தூர் | 47 |
| 3. | பார்திபன் | சின்னதுரை | இந்து | டிரைவர் | நடுசூராங்குடி, சாத்தூர் | 35 |
| 4. | பாலமுருகன் | சின்னதுரை | இந்து | கூலி | நடுசூராங்குடி, சாத்தூர் | 28 |
| 5. | தாஸ்குட்டி | ஜான்ராஜ் | இந்து | கூலி | அச்சங்குளம், சிவகாசி | 28 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Occurrence (7) | Complaint (8) | Apprehension of appearance (9) | Release on Bail (10) | Commencement of trail (12) | Close of Trial (13) | Sentence or Order (14) | Explanation of delay (16) |
| 16.04.2023 | 16.04.2023 | A4, A5 - 16.04.23<br>A1-08.05.23(Surrender)<br>A2,A3-27.04.23(Surrender) | A1,A2,A3-25.04.23<br>A4,A5-24.04.23 | 14.08.2023 | 29.06.2026 | 30.06.2026 | |

குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் :– 08.06.2023
குற்ற இறுதி அறிக்கை கோப்புக்கு எடுத்த நாள் :– 19.06.2023
இதன் நகல் :– மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.06.30 18:39:12 +0530

Judicial Magistrate, No.II Sattur.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
முன்னிலை : திரு. சா. வரதராஜன், B.A.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்
2026 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 30 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண் 196/2023
*****

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime number of the Offence) | அரசுக்காக,காவல் உதவி ஆய்வாளர், சாத்தூர் தாலுகா காவல் நிலையம். (குற்ற எண்.69/2023) |
| 2. | எதிரிகளின் பெயர் (Name) | 1.திரு.சுந்தர் என்ற சூர்யா,(வயது 27/26)<br>த/பெ.சந்திரகுமார்,<br>5/5 சி.கிழக்கு தெரு,<br>நடுசூராங்குடி,<br>சாத்தூர் தாலுகா.<br>2.திரு.சந்திரகுமார்,(வயது 47/26)<br>த/பெ.சுந்தர்ராஜ்,<br>5/5 சி. நடுசூராங்குடி,<br>சாத்தூர் தாலுகா.<br>3.திரு.பார்திபன்,(வயது 35/26)<br>த/பெ.சின்னதுரை,<br>5/245, வடக்கு காலனி,<br>நடுசூராங்குடி,<br>சாத்தூர் தாலுகா.<br>4.திரு.பாலமுருகன்,(வயது 28/26)<br>த/பெ.சின்னதுரை,<br>5/245, வடக்கு காலனி,<br>நடுசூராங்குடி,<br>சாத்தூர் தாலுகா.<br>5.திரு.தாஸ்குட்டி,(வயது 28/26)<br>த/பெ.ஜான்ராஜ்,<br>வடக்கு காலனி,<br>நடுசூராங்குடி,<br>சாத்தூர் தாலுகா. |
| 3. | எதிரிகளின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரிகளின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரிகளின் முகவரி (Residence) | |
| 6. | எதிரிகளின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 16.04.2023 |
| 8. | புகார் தேதி (Complaint) | 16.04.2023 |
| 9. | எதிரிகள் கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | A4, A5 – 16.04.23<br>A1–08.05.23(Surrender)<br>A2,A3–27.04.23(Surrender) |
| 10. | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | A1,A2,A3–25.04.23<br>A4,A5–24.04.23 |
| 11. | Commitment | |
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி | 14.08.2023 |



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.30 18:39:25 +0530

| | | |
|---|---|---|
| | (Commencement of Trial) | |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 29.06.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294(b), 323 உ/இ 149, 324, 326 உ/இ 149 மற்றும் 506(2) கீழும், 2, 3 மற்றும் 4வது எதிரிகள் மீது 147, 148, 294(b) உ/இ 149, 323, 324 உ/இ 149, 326 உ/இ 149 மற்றும் 506(2) கீழும், 5 வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(b) உ/இ 149, 323 உ/இ 149, 324, 326 மற்றும் 506(2) கீழும் வனைந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளிகள் இல்லை என்று கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்கள். |
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு | எதிரிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள் |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | சாட்சிகளை முன்னிலைப்படுத்துவதில் காலதாமதம். |

இவ்வழக்கானது என் முன்பு 29.06.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ஆறுமுகராஜா, M.A.,L.L.B., அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**<u>தீர்ப்புரை</u>**

**1. <u>குற்றச்சாட்டு</u> :-**

**1.1.** 16.04.2023 ம் தேதி அதிகாலை சுமார் 00.30 மணியளவில் நடுச்சூரங்குடி மாரியம்மன் கோவில் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு அக்கினி சட்டி சாமி ஊர்வலம் வந்த போது சாமி ஊர்வலத்திற்கு பின்னால் வந்த புகார்தாரரும், அவரது குடும்பத்தினருடன் வந்து கொண்டிருந்த போது நடுச்சூரங்குடி கிழக்கு தெருவில் உள்ள கன்னியம்மாள் வீட்டிற்கு முன்பாக நின்று 1 முதல் 5 எதிரிகள் ஒன்று சேர்ந்து வந்து அதில் 1வது எதிரி புகார்தாரரை பார்த்து பொது இடத்தில் வைத்து "ஏண்டா தேவிடியா மகனே உனக்கு என் தங்கச்சி கேட்குதாடா என சொல்லி அண்ணன், தம்பி மூன்று பேரையும் அடிச்சு



Digitally signed by S VARATHARAJAN
S VARATHARAJAN
Date: 2026.06.30 18:39:28 +0530

கொல்லுங்கடா" என கூறினார். 2 முதல் 5 எதிரிகள் சேர்ந்து புகார்தாரரை மாறி, மாறி சிறுகாயத்தை ஏற்படுத்தினர். விலக்க வந்த அரவிந்குமாரை 1வது எதிரி இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியால் அரவிந்குமாரின் முதுகின் பின்பக்கம் மாறி, மாறி குத்தி ரத்தகாயத்தை ஏற்படுத்தினார். 5வது எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியால் அஜித்குமாரை கையிலும், முதுகிலும், மாறி, மாறி குத்தி முதுகு தண்டு வட எலும்பு முறிவு கொடுங்காயத்தை ஏற்படுத்தினார். சம்பவத்தை பார்த்த சாட்சிகள் சத்தம் போடவும் எதிரிகள் அனைவரும் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி என்னைக்கு இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 1 எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(2) படியும், 2 முதல் 4 வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 323, 506(1) படியும், 5வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 326, 506(2) ன் கீழான குற்றங்களுக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் நகல்</u> :-

இவ்வழக்கில், எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசு தரப்பில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் கீழ் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. <u>கு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 ன் கீழ் விசாரணை</u> :-

**3.1.** எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுத்த பிறகு, அவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கை பற்றி கேட்ட போது, அவர்கள் பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும் கூறினார்கள்.

**3.2.** இருதரப்பிலும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புகளை ஆய்வு செய்த போது, 1 எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294(b), 323 உ/இ 149, 324, 326 உ/இ 149 மற்றும் 506(2) கீழும், 2, 3 மற்றும் 4வது எதிரிகள் மீது 147, 148, 294(b) உ/இ 149, 323, 324 உ/இ 149, 326 உ/இ 149 மற்றும் 506(2) கீழும், 5 வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(b) உ/இ 149, 323 உ/இ 149, 324, 326 மற்றும் 506(2) கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைய போதுமான முகத்தோற்ற சான்றுகள் இருந்ததால், எதிரிகள் மீது அதே பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்ற சாராம்ச சங்கதிகள் குறித்து அவரிடம் விளக்கி கூறிய போது, எதிரிகள் பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார்கள். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. <u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :-



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.06.30 18:39:32 +0530

பட்டியல் சாட்சிகளில் இருந்து 3 நபர்களும், கூடுதல் சாட்சியாக காவல் உதவி ஆய்வாளர் திரு.துர்கேஷ்வரன் என்பவரும் அ.சா.1 முதல் அ.சா.5 ஆக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுபொருள் அ.சா.பொ.1 மற்றும் 2 தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு</u> :–

**5.1.** 15.04.2023 ஆம் தேதி இரவு 12:30 மணியளவில், அ.சா.1 – முத்துக்குமார் அவருடைய ஊர் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு சாமி ஊர்வலம் வந்தபோது, ஊர்வலத்திற்குப் பின்னால் அவரும் அவருடைய சகோதரர்களான அ.சா.2 – அஜித்குமார் மற்றும் அ.சா.3 – அரவிந்த்குமார் ஆகியோரும் குடும்பத்தினருடன் வந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது கன்னியம்மாள் வீட்டிற்கு முன்பாக நின்று கொண்டிருந்த இந்த வழக்கு எதிரிகளான சூர்யா, சந்திரகுமார், பார்த்திபன், பாலமுருகன் மற்றும் தாஸ் குட்டி ஆகியோர்களில், சூர்யா என்பவர் அ.சா.1 – முத்துக்குமாரைப் பார்த்து, "ஏன்டா தேவிடியா மகனே, உனக்கு என் தங்கச்சியைக் கேட்பதாடா?" என்று சொல்லி, "அண்ணன் தம்பி மூன்று பேரையும் அடித்துக் கொல்லுங்கடா!" என்று கூறினார்.

**5.2.** உடனே எதிரிகளான சந்திரகுமார், பார்த்திபன் மற்றும் பாலமுருகன் ஆகியோர் அ.சா.1 – முத்துக்குமாரைக் கையால் அடித்துக் கீழே தள்ளிவிட்டார்கள். அந்தச் சமயத்தில், சூர்யா தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் அ.சா.3 – அரவிந்த்குமாரை மாறி மாறி குத்தினார்; தாஸ் குட்டி தான் வைத்திருந்த கத்தியால் அ.சா.2 – அஜித்குமாரை மாறி மாறி குத்தினார். அருகில் இருந்தவர்கள் எதிரிகளைச் சத்தம் போடவே, எதிரிகள் "என்னைக்கு இருந்தாலும் உங்களைக் கொல்லாமல் விடமாட்டோம்" என்று மிரட்டிவிட்டுச் சென்றார்கள்.

**5.3.** காயம்பட்ட அ.சா.3 – அரவிந்த்குமாரையும் அ.சா.2 – அஜித்குமாரையும் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று முதலுதவி சிகிச்சை அளித்து, மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். இந்த வழக்குச் சம்பவம் தொடர்பாக 16.04.2023 ஆம் தேதி காலை 10 மணிக்கு, உதவி ஆய்வாளர் ஹரிராம் சாத்தூர் தாலுகா காவல் நிலைய அலுவலராக இருந்தபோது, அ.சா.1 – முத்துக்குமார் காவல் நிலையத்தில் ஆஜராகி புகார் மனு (அ.சா.ஆ.1) கொடுத்தார்.

**5.4.** அதன் அடிப்படையில், நிலைய குற்ற எண் 69/2023–இல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 506(2) ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்யப்பட்டது. வழக்கை புலன் விசாரணைக்கு



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.30 18:39:35 +0530

எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் ஹரிராம், சம்பவ இடத்திற்குச் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு, பார்வை மகஜர் (அ.சா.ஆ.4) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.5) தயாரித்தார். மேலும், அவர் சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்தார்.

**5.5.** 16.04.2023 ஆம் தேதி மதியம் 2 மணிக்கு எதிரிகளான தாஸ் குட்டி மற்றும் பாலமுருகன் ஆகிய இருவரையும் கைது செய்து விசாரித்தபோது, தாஸ் குட்டி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தைச் சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தார். அதன்படி, அவர் இந்த வழக்குச் சம்பவத்திற்குப் பயன்படுத்திய கத்தியையும், எதிரி சூர்யா வைத்திருந்த கத்தியையும் சுடுகாட்டில் உள்ள முள்வேலிப் புதருக்கு அடியில் மறைத்து வைத்திருப்பதாகவும், தன்னை அழைத்துச் சென்றால் அதை எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். அதன் அடிப்படையில், மேற்படி இடத்தில் இருந்து எதிரி தாஸ் குட்டி எடுத்துக் கொடுத்த இரண்டு கத்திகளை (அ.சா.பொ.1 மற்றும் 2) கைப்பற்றுதல் அட்டாட்சி (அ.சா.ஆ.7) தயாரித்து உதவி ஆய்வாளர் ஹரிராம் கைப்பற்றினார். எதிரிகளைத் தக்க காவல் காவலுடனும், கைப்பற்றப்பட்ட சொத்துக்களைப் படிவம் 91 (அ.சா.ஆ.8) மூலமாகவும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்.

**5.6.** அ.சா.2 – அஜித்குமார் மற்றும் அ.சா.3 – அரவிந்த்குமார் ஆகியோருக்குச் சிகிச்சை அளித்த மருத்துவர்களை விசாரித்து, அவர்கள் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்றிதழ்களைப் (அ.சா.ஆ.9 முதல் 14 வரை) பெற்று, மருத்துவர்களின் வாக்குமூலங்களைப் புலன் விசாரணை அதிகாரி பதிவு செய்தார். அவருடைய விசாரணையிலிருந்து வழக்குச் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால், இந்த வழக்கின் சட்டப்பிரிவுகளை இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 326 மற்றும் 506(2) ஆக மாற்றம் செய்து, அதே குற்றங்களுக்கு எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**6. <u>கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) கீழ் விசாரணை</u> :–**

மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவர்களிடம் விளக்கி கேட்ட போது, அவர்கள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார்கள். மேலும், எதிரிகள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள்.

**7. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>:–**

1 எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294(b), 323



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.30 18:39:39 +0530

உ/இ 149, 324, 326 உ/இ 149 மற்றும் 506(2) கீழும், 2, 3 மற்றும் 4 வது எதிரிகள் மீது 147, 148, 294(b) உ/இ 149, 323, 324 உ/இ 149, 326 உ/இ 149 மற்றும் 506(2) கீழும், 5 வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(b) உ/இ 149, 323 உ/இ 149, 324, 326 மற்றும் 506(2) கீழும் வனைந்துள்ள குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

**8. <u>சாட்சியங்கள் மதிப்பீடு</u> :-**

**8.1.** இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபர்களில் ஒருவரும் புகார்தாரருமான முத்துக்குமார் மற்றும் காயம்பட்ட அவருடைய சகோதரர்களான ராஜ்குமார் என்ற அஜித்குமார் மற்றும் அரவிந்த்குமார் ஆகியோர் அரசு தரப்பில் 1 முதல் 3 சாட்சிகளாக (அ.சா.1 முதல் அ.சா.3 வரை) விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

**8.2.** அவர்களுடைய சாட்சியத்தில், சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இரவு 7:30 மணியளவில் அவரது ஊரில் உள்ள கன்னியம்மாள் வீட்டின் அருகே கூட்டமாக இருந்தார்கள் என்றும், அந்தப் பேச்சுவார்த்தையின்போது தள்ளுமுள்ளு ஏற்பட்டது என்றும், அதில் அ.சா.3 – அரவிந்த்குமார் மற்றும் அ.சா.2 – அஜித்குமார் ஆகியோரின் முதுகில் காயம் ஏற்பட்டது என்றும், இரவு நேரமாக இருந்ததால் தாக்கியது யார் என்று தெரியாது என்றும், அ.சா.1 – முத்துக்குமாருக்குக் காயம் எதுவும் ஏற்படவில்லை என்றும், நடந்த சம்பவத்திற்குச் சாத்தூர் தாலுகா காவல் நிலையத்திற்குச் சென்று அ.சா.1 – முத்துக்குமார் புகார் (அ.சா.ஆ.1) கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**8.3.** மேற்படி மூன்று சாட்சிகளும் அவர்களின் முந்தைய வாக்குமூலத்திலிருந்தும் அரசு தரப்பு வழக்கிலிருந்தும் முரணாகச் சாட்சியம் அளித்ததால், அவர்களை அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக்கி குறுக்கு விசாரணை செய்தபோதிலும், அவர்களிடமிருந்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாகச் சாட்சியம் எதுவும் பெறப்படவில்லை. குறிப்பாக, மேற்படி மூன்று சாட்சிகளும் தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதாகவும், சமாதானமாகச் செல்ல எதிரிகள் அவர்களை மிரட்டவோ கட்டாயப்படுத்தவோ இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**8.4.** எதிரிகள் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் (அ.சா.ஆ.2) கையொப்பம் செய்துள்ளதாகவும் அவர்கள் சாட்சியம் அளித்ததால், அரசு தரப்பில் இதர சாட்சிகள் விலக்கிக் கொள்ளப்பட்டு, கூடுதல் சாட்சியாகச் சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.4 – துர்கேஸ்வரன் விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் இந்த வழக்கில் நடைபெற்ற புலன் விசாரணை தொடர்பான விவரங்களை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.30 18:39:42 +0530

அவருடைய சாட்சியத்தைத் தவிர, இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிராக வேறு எவ்விதமான சாட்சியமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**8.5.** மேலும், அ.சா.ஆ.1 – புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்று அ.சா.1 ஒப்புக்கொண்டபோதிலும், அதில் எழுதியுள்ள வாசகங்களை உறுதிப்படுத்திச் சாட்சியம் அளிக்கவில்லை. ஆகையால், இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் புகாரை அ.சா.1 தான் கொடுத்தாரா? என்பதும் சந்தேகம் கொள்ளும் வகையில் அமைகிறது. ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை நிரூபிப்பது வேறு, அதன் உள்ளடக்கத்தை நிரூபிப்பது வேறு என்பதால், அ.சா.1–இன் சாட்சியம் மூலம் புகார் (அ.சா.ஆ.1) அவரால் கொடுக்கப்பட்டது என்று நிரூபிக்கப்படவில்லை.

**8.6.** எனவே, கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள உதவி ஆய்வாளரைத் தவிர, இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிராக வேறு சாட்சியம் எதுவும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. கூடுதல் சாட்சியும் புலன் விசாரணை தொடர்பான சங்கதிகளை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளதால், அது மட்டுமே எதிரிகளைக் குற்றவாளிகள் என்று முடிவு செய்யப் போதுமானதல்ல.

**8.7.** இதன்மேல் பரிசீலனை செய்யப்பட்ட அரசு தரப்பு சாட்சியங்களின் ஒட்டுமொத்த தொகுப்பாக, அரசு தரப்பு வழக்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டுத் தன் வழக்கை நிரூபிக்கத் தவறியுள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதி, இந்த வழக்கில் எதிரிகளுக்குச் சந்தேகத்தின் பலன் கிடைக்கக்கூடியது என்று முடிவு செய்கிறது.

**9.** <u>**முடிவு**</u> **:–**

**9.1.** 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294(b), 323 உ/இ 149, 324, 326 உ/இ 149 மற்றும் 506(2) கீழும், 2, 3 மற்றும் 4 வது எதிரிகள் மீது 147, 148, 294(b) உ/இ 149, 323, 324 உ/இ 149, 326 உ/இ 149 மற்றும் 506(2) கீழும், 5 வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(b) உ/இ 149, 323 உ/இ 149, 324, 326 மற்றும் 506(2) கீழும் வனைந்துள்ள குற்றச்சாட்டுக்கு அவர்கள் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, அவர்கள் கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்கள்.

**9.2.** இவ்வழக்கில் PR.No.157/2023 ல் அடங்கிய வழக்கு சொத்தான இரண்டு கத்திகள் (அ.சா.பொ.1 மற்றும் 2) பயனற்றது என்பதால் மேல் முறையீடு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

**9.3.** இவ்வழக்கில் எதிரிகள் ஆஜராகி எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.06.30 18:39:46 +0530

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 30.06.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.30 18:39:51 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
சாத்தூர்

**பிற்சேர்க்கை**

**1. அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.முத்துக்குமார் (நிகழ்நிலை புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு.ராஜ்குமார் என்ற அஜித்குமார் |
| அ.சா.3 | திரு.அரவிந்த்குமார் |
| அ.சா.4 | திரு.துர்கேஸ்வரன்(சிறப்பு சார்பு ஆய்வாளர்) |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 16.04.2023 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 22.06.2026 | சமாதான மனு |
| அ.சா.ஆ.3 | 16.04.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 16.04.2023 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 16.04.2023 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 16.04.2023 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.7 | 16.04.2023 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.8 | 16.04.2023 | படிவம்–91 |
| அ.சா.ஆ.9 | 16.04.2023 | அ.சா.2 க்கான விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.10 | 16.04.2023 | அ.சா.2 க்கான காயச்சான்று |
| அ.சா.ஆ.11 | 16.04.2023 | அ.சா.3 க்கான விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.12 | 16.04.2023 | அ.சா.3 க்கான காயச்சான்று |
| அ.சா.ஆ.13 | 16.04.2023 | அ.சா.3 க்கு விருதுநகர் அரசு மருத்துவமனை வழங்கிய விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.14 | 22.05.2023 | அ.சா.3 க்கு விருதுநகர் அரசு மருத்துவமனை வழங்கிய காயச்சான்று |
| அ.சா.ஆ.15 | 26.05.2023 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**3. அரசு தரப்பு சான்று பொருள்** :–அ.சா.பொ.1–சுமார் 31 செ.மீ மர கைபிடியுடன் கூடிய கத்தி மற்றும் அ.சா.பொ.2 சுமார் 20.5 செ.மீ நீளம் உள்ள கத்தி ஒன்று.

**4. எதிரிகள் தரப்பு சாட்சிகள்** :– இல்லை

**5. எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்** :– இல்லை

**6. எதிரிகள் தரப்பு சான்று பொருட்கள்** :– இல்லை

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.30 18:39:55 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,
சாத்தூர்

**குறிப்பு :–**

1. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
2. சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.